# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை,** (Pension Pay Office பின்புறம்),
**நந்தனம், சென்னை– 600 035.** தொலைபேசி எண். 044-29515590

**விசாரணை நாள் 06.10.2026**

**முன்னிலை**

**திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண் SA 8295-E-2024**

| | | |
|---|---|---|
| திரு ஜி.வெங்கடேஷ் | .. | மேல்முறையீட்டாளர் |
| /எதிர்/ | | |
| பொதுத் தகவல் அலுவலர்/<br>பிரிவு அலுவலர்,<br>தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்,<br>எண்.100, அண்ணா சாலை, கிண்டி,<br>சென்னை - 600 032 | .. | பொது அதிகார அமைப்பு |

******

## இறுதி ஆணை

1) இவ்வழக்கு குறித்த விசாரணை இவ்வாணையத்தில் 07.09.2026 அன்று நடைபெற்றபோது, குறித்துரைத்த காலத்திற்குள் மனுதாரருக்கு பதில் வழங்காத அப்போதைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் பிரிவு அலுவலர் மீது ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதற்கான விளக்கத்தை, இவ்வாணையத்தில் 06.10.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென உத்தரவிடப்பட்டிருந்தது.

2) அதனை தொடர்ந்து, பொதுத் தகவல் அலுவலர்/ தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் பிரிவு அலுவலர் திரு பி.ஆர்.இரவீந்திரன் இவ்வாணையத்தில் 06.10.2026 அன்று ஆஜராகி, தமிழ்நாடு உள்ளாட்சி முறைமன்ற நடுவராக நியமிக்கப்பட்டவரது பதவிக்காலம் 07.01.2024 அன்று நிறைவுற்றது என்றும், அதனை தொடர்ந்து, அவருடைய பதவி காலத்தில் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்ட உதவி பதவிவாளர், பிரிவு அலுவலர் உள்ளிட்ட அனைத்து நிர்வாக பணியாளர்களின் பதவி காலமும் 31.01.2024 அன்றுடன் முடிந்து விட்டது என்றும், அதன் பின்னர் 04.07.2024 அன்று புதிய நடுவர் நியமனம் செய்யப்பட்டு. 08.07.2024 அன்றுதான் காலிப்பணியிடங்கள் நிரப்பப்பட்டன என்றும், இந்த இடைப்பட்ட காலத்தில்தான் மனுதாரர் தனது 6(1) மனுவை 16.02.2024 அன்று அனுப்பியிருந்ததாகவும், ஆகவே தான் மனுதாரருக்கு உரிய காலத்தில் தகவல் வழங்க இயலாமல் போய்விட்டது என்றும் தெரிவித்து அறிக்கை சமர்ப்பித்தார்.

3) பொதுத் தகவல் அலுவலரின் மேற்படி விளக்கத்தை ஆணையம் ஏற்று, இந்த மேல்முறையீட்டு மனுவை முற்றாக்கம் செய்து உத்தரவிடுகிறது.

**(ஒம்/- (அபய் குமார் சிங்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண் SA 8295-E-2024**

பொதுத் தகவல் அலுவலர்/
பிரிவு அலுவலர்,
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள்
முறைமன்ற நடுவம்,
எண்.100, அண்ணா சாலை, கிண்டி,
சென்னை - 600 032

திரு ஜி.வெங்கடேஷ்,
எண்.233, L.F.சாலை,
கச்சிராயப்பாளையம் - 606 207
சின்னசேலம் வட்டம்,
கள்ளக்குறிச்சி மாவட்டம்

Copy to file
CR/PA